(ஆ) தமிழ் நாடு 1975 ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/75).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தமிழ் நாடு 1975-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

அட்டவணை, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும் என்று முன் மொழி கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(5) தகவல் கோரல்.

முதலமைச்சர்களின் படங்களை சட்ட மன்றத்தில் வைப்பதற்கு கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வரப்பெற்றுள்ளதா என்பது குறித்து.

திரு. நா. வீராசாமி: பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் சார். தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சில நாட் களுக்கு முன்னால் இந்த மன்றத்தில் மறைந்த தலைவர் காமராஜர் திருவுருவப் படத்தை வைப்பதற்கு அறிவிப்புக் கொடுத்ததற்கு இங்கே எல்லோரும் நன்றி தெரிவித்தார்கள். அதேபோல் இந்தத் தமிழ் நாட்டிலே இதுவரையில் இருந்த, இப்போது இருக்கின்ற முதலமைச்சர்களின் திருவுருவப் படங்களையும் இந்த மன்றத்தில் வைக்கவேண்டுமென்ற கோரிக்கையை நம்முடைய எதிர்க்கட்சியை

சார்ந்தவர்கள் விடுத்து இருப்பதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட கோரிக்கை ஏதாவது நம்முடைய அரசுக்கு வந்துள்ளதா என்பதை முதலமைச்சர் அவர்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இப்போதுதான் நம்முடைய உறுப்பினர் கோதண்டராமையா அவர்கள் பல உறுப்பினர்களிடத்தில் கையெழுத்து வாங்கி என்னிடத்தில் அளித்தார். முன்பு இருந்த குமாரசாமி ராஜா, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், பிரகாசம் பந்துலு ஆகிய முதலமைச்சர்களின் படங்களை வைக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதைப் பற்றி அரசு பிறகு ஆலோசிக்கும்.

(6) நடைமுறைக் கேள்வி.

விடைகளுக்கான திருத்த அறிக்கைகளைத் தாமதமாக அளித்தது குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி: Sir, on a Point of order. சற்று நேரத்திற்கு முன்புதான் மாண்புமிகு அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள், தாம் ஏற்கனவே கொடுத்த பதிலுக்கு ஒரு திருத்தத்தைக் கொடுத்தார்கள். ரூல் 82-ஏயில் In the same sitting or at any time thereafter என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பிப்ரவரி, மார்ச் முடிந்து, அடுத்தாற்போல் ஒரு செஷனும் கூடியிருக்கிறது. இப்படியிருந்தும், உடனே திருத்தத்தைக் கொடுக்காமல் இப்போதுதான் கொடுக்கப்படுகிறது. இந்த மாதிரி, 2, 3 வருடம் கழித்தும் கொடுக்கலாமா? டைரக்டிவ் படி ஒன்று அந்த செஷனில் கொடுக்க வேண்டும், அல்லது அடுத்த செஷனிலாவது கொடுக்க வேண்டும் என்றால் நன்றாக இருக்கும். அப்படி இல்லை என்றால் எதை மறுக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள முடியாமல் போய்விடுகிறது. ஸ்பிரிட் ஆப் தி ரூலை பார்க்க வேண்டும் 'in the same sitting or at any time thereafter' என்று சொல்லப்பட்டிருப்பதை ஒட்டி, உடனடியாகக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.